**மக்காச்சோளத்திற்கான விலை முன்னறிவிப்பு**

இந்தியாவின் மொத்த உணவு உற்பத்தியில் மக்காச்சோளம் கிட்டததட்ட 15 சதவீதம் பங்களிக்கிறது. மத்தியப் பிரதேசம், கர்நாடகா, பீகார், தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரா, உத்திரப்பிரதேசம் மற்றும் மேற்கு வங்கம் ஆகியவை இந்தியாவில் மக்காச்சோளம் பயிரிடும் முக்கிய மாநிலங்களாகும். இந்த மாநிலங்கள் இந்தியாவின் மொத்த மக்காச்சோள உற்பத்தியில் 78 சதவீதம் பங்களிக்கின்றன. வேளாண் அமைச்சகத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி காரீப் 2020-21 ஆம் ஆண்டுக்கான மக்காச்சோள உற்பத்தி 19.88 மில்லியன் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை விட சற்றே அதிகம். தமிழ்நாட்டில் 2018-19 ஆம் ஆண்டில் மக்காச்சோளம் 3.90 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு 2.83 மில்லியன் டன் உற்பத்தி செய்தது. சேலம், திண்டுக்கல், நாமக்கல், புதுக்கோட்டை, திருப்பூர், விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகியவை மக்காச்சோளம் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும்.

வர்த்தக மூலங்களின்படி, தமிழ்நாட்டில் உள்ள கோழிப் பண்ணை நிறுவனங்களின் பாதிக்கு மேலான மக்காச்சோளத்தின் தேவையை, கர்நாடகா, பீகார் மற்றும் ஆந்திராவிலிருந்து வரும் மக்காச்சோளம் பூர்த்தி செய்கிறது. இந்த பருவத்தில் குறைந்த விலை காரணமாக உடுமலைபேட்டை பகுதியில் மக்காச் சோள உற்பத்தி 40 சதவீதம் குறைந்துள்ளது. அதே சமயம் ,கர்நாடகாவின் அதிக உற்பத்தி எதிர்வரும் மாதங்களில் தமிழக கோழி நிறுவனங்களின் மக்காச்சோள தேவையை பூர்த்தி செய்யும். முசிறி, பெரம்பலூர் மற்றும் துறையூர் பகுதிகளில் பயிர்கள் படைப்பூழு தாக்கம் இல்லாமல் நன்றாக உள்ளது. மேலும் கர்நாடகாவிலிருந்து வரும் மக்காச்சோளம் வரத்தானது டிசம்பர் மாதம் இறுதி வரை இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழ்நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம் கடந்த 16 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய மக்காச்சோளத்தின் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது.

ஆய்வுகளின் அடிப்படையில், நல்ல தரமான மக்காச்சோளத்தின் விலையானது (நவம்பர் முதல் ஜனவரி 2021 வரை) குவிண்டாலுக்கு ரூ.1400 முதல் ரூ.1600 வரை இருக்குமென கணித்துள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய ஆலோசனையின் அடிப்படையில், விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*
*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயமுத்தூர்-641 003*
*தொலைபேசி- 0422-2431405*

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*
*சிறு தானிய துறை*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர் - 641 003.*
*தொலைபேசி எண் :- 0422-2450507*